
COMICSPDFTIMES
HSC
பூதத்தீவு
வாண்டுமாமா



# பூதத்தீவு

கதை: வாண்டுமாமா சித்திரம்: வினு

## முன்னுரை

பதினாறு அடி உயரம் ஒருவன் இருந்தால் பார்ப்பதற்கு எப்படி இருக்கும்? 'வாட்ட சாட்டமாக' என்று வருணிப்பார்களே அந்த வாட்ட சாட்டம் கூட ஏழடிக்கு மேல் இருக்காது. ஆனால் பதினாறு அடி உயரம் ஒரு பையன் இருந்தால்? இருந்தானே! அவன் படுக்க, படிக்க, நடக்க எத்தனையோ பிரச்னைகள்; வேடிக்கைகள். ஆனால் அந்தப் பையன் அதி பலசாலியாகவும் இருந்தான். வீராதி வீரனாக விளங்கினான். ஒரு சமயம் அவன் உயிருக்கே அபாயம் நெருங்கிய போது அவன் நல் வாழ்வில் அக்கறை கொண்ட அயல்நாட்டு ராணி அளித்த குளிகையைச் சாப்பிட்டு உயிர் தப்பியதோடு அல்லாமல் உயரமும் குறைந்து உருவத்திலும் பலத்திலும் பீமசேனனைப் போலானான்.

'இப்படியொரு கதாநாயகனைக் கொண்ட கதையை எங்கோ எப்போதோ படித்திருக்கிறோமே' என்று சிலர் நினைக்கலாம். உண்மை தான். இந்த **விஜய வல்லபனின்** கதை வீரவிஜயன் என்ற தலைப்பில் பல வருஷங்களுக்கு முன்பு கல்கியில் தொடராக வந்தது. **ரத்தினபுரி**யின் மன்னர் **ரணமல்லரி**ன் மதிமந்திரி **கருணாகரனி**ன் மகன்தான் இந்த விஜயவல்லபன்.

**காலாந்தகன்** என்று ஒரு சதி மந்திரி அவனது சூழ்ச்சிகளுக்கு இலக்காகி மன்னர் ரணமல்லர் விஜயனை நாடு கடத்துகிறார். மன்னரையே சிறையில் தள்ளி ரத்தினபுரியின் ராஜாவாகிறான் காலாந்தகன். ஆனால் விஜயவல்லபன் மன்னரைச் சிறைமீட்டுக் காலாந்தகனைக் கழுவில் ஏற்றச் செய்கிறான். இது பழைய கதை.

ரணமல்லருக்குப் பிறகு அவர் தம்பி **மங்களேசர்** சிங்காதனம் ஏறுகிறார். அவர் விஜயனிடம் அன்போடு இருக்கிறார். விஜயவல்லபனின் படைத் தலைமையிலே பல வருஷங்கள் நாட்டில் அமைதி நிலவுகிறது. பகைவர்கள் பதுங்கினார்கள். ஆனால் இந்த அமைதி நீடிக்கவில்லை. காலாந்தகன் மறைந்தாலும் தப்பி ஓடிய அவன் மகன் **அக்னிகேது** எங்கோ ஒளிந்து கொண்டு சாம்ராஜ்யத்துக்குத் தொல்லை கொடுக்கலானான்.



வடதிசையிலே ரத்னபுரிக்குப் பல தீவுகள் உண்டு. கடல் கடந்து போக வேண்டிய பிரதேசம் அவை. பல வருடங்களாக அங்கிருந்து கப்பலும் வரவில்லை. தகவலும் இல்லை. விவரம் அறிந்துவரப் போன வீரர் சிலர் பிரமை பிடித்தவர்களாகப் பேசும் சக்தி இழந்தவர்களாக; பேசினாலும், கிலி கொண்டவர்களாய், "**பூதத் தீவு, பூதத் தீவு**" என்று புலம்பிக் கொண்டு திரும்பினார்கள். அவர்களிடமிருந்து வேறு எதையும் அறிய முடியவில்லை. இந்த நிலையில் வீர விஜயன் பூதத்தீவின் மர்மத்தை அறிந்து வரச் சில வீரர்களுடன் கப்பலில் கிளம்புகிறான். விஜயனின் வலது கையான **வஜ்ர தந்தன்** என்ற வீரனும் உடன் செல்லுகிறான். இனி பூதத் தீவில் நடப்பதை ஓவியர் **வினு**வின் படங்கள் உங்களுக்குக் கதை சொல்லும்.

COMICS PDF TIMES


காற்று சாதகமாக இருக்கிறது. இதே மாதிரி என் பிரயாணமும் நல்லபடியாக இருக்க வேணும்.
பூதத்தீவில் புதைந் திருக்கும் மர்மம் என்னவாக இருக் கும்? அங்கு வாழும் மக்கள் எப்படிப்பட்ட வர்கள்? அவர்களை, ஆட்டுவிக்கும் சக்தி எதுவாக இருக்கும்?
திடீரென்று வானம் இருண்டது. மின்னல் வெட்டியது.
கடல் கொந்த ளிக்கிறது.
பாய் மரம் முறியும் போலி ருக்கிறது. இப்படி யொரு பேய்க் காற்று?
பூதத்தீவிற்குச் செல்லும் கப்பல் களெல்லாம் இந்த இடத்தில் தான் மூழ்குகின்றனவாம்.
பீதிக்கு இடம் தராதே துடுப் பை உறுதியா கப்பிடி. பாய் மரத்தை விரை வாக இறக் குங்கள்.
சீற்றங் கொண்ட கடலலைகள் கப்பலை பந்தாடித் திசை மாற்றி இழுத்துச் செல்கின்றன.



கப்பல் மூழ்கி விடுமோ என்று எண்ணினேன். நல்லவேளை சொற்ப சேதத்தோடு கரை ஒதுங்கிவிட்டது.
இது இயற்கையான புயல் அல்ல. ஏதோ ஒரு மாயச்சக்திதான் நம் கப்பலை இங்கு இழுத்து வந்துள்ளது. நம் கப்பல்கள் எல்லாமே இப்படித்தான் வந்து ஒதுங்கியுள்ளன. பார்த்தாயா?
வஜ்ர தந்தனும் விஜயனும் மட்டும் கரை இறங்கி வருவதைக் கண்காணிக்கும் இருசுடர்விழிகள் காட்டுப்பன்றிகளுக்கு....
ம், துரத்துங்கள்! அவ்விருவரையும் கடலை நோக்கி விரட்டுங்கள்.
கடற்கரையிலா இந்தக் கொடிய காட்டுப் பன்றிகள்? விஜயா இது அதிசயமாக இருக்கிறதே!
அதிசயமோ, அற்புதமோ! இவை தாக்கும் மூர்க்கத்தைப் பார்த்தால்.. நம்மைக் கிழித்துப் போட்டு விடப் போகின்றன.
திடீரென்று ஒரு குரல் கட்டளையிடுகிறது.
திரும்புங்கள், தாக்கியது போதும். ம்... திரும்புங்கள்.
அவ்விருவரும் ரொம்பவும் பயந்து விட்டார்கள். ஹ,ஹ,ஹா!
அந்தக் குரலின் ஆணைக்கு அடங்கி காட்டுப் பன்றிகள் சாதுவாகித் திரும்புகின்றன.
அந்த விலங்குகளை அடக்கி யாளுவது ஒரு பெண்ணல்லவா?
எனக்குச் சொந்தமான இத்தீவிலே என் அனுமதியின்றிக் கால் வைத்தவருக்குத் தண்டனை மரணம் தான். ஆனாலும் உங்களை மன்னிக்கிறேன்
காட்டுப் பன்றிகளை நான் திருப்பி அழைக்காவிடில் அவை உங்களைக் கிழித்துப் போட்டிருக்கும். உங்களைப் பார்த்தால் வீரர்களாகத் தெரிகிறது. வாருங்கள் போகலாம்.
தொடரும்


பூதத் தீவு
2
காட்டுப்பன்றி களை அடக்கி யாளும் கன்னி யின் பின்னால் மந்திரத்தினைக் கட்டுண்ட வனைப்போலப் பின்தொடர்ந் தான் வஜ்ர தந்தன். ஆனால் விஜயனோ?
கதை : வாண்டுமாமா
சித்திரம் : வினு
பெண்ணே! எங்களுக்கு ஏகப் பசி. சாப்பிட ஏதாவது தருவாயா னால் நாங்கள் உன்னை ஏதும் செய்ய மாட்டோம்.
வஜ்ரா... நில்... போகாதே. ஏதோ அபாயத்தின் அடையாளம் அவள்.
மனித நடமாட்டமற்ற தீவு, காட்டுப் பன்றிகளின் மூர்க்காவேசத் தாக்குதல், போதையூட்டும் அழகி! விஜயனுக்கு அந்தச் சூழல் அச்சமூட்டுவதாக இருந்தது.
வீரனே! என் பின்னால் வா.
இக்காட்டுப் பன்றிகளையும் கன்னியையும் தவிர வேறு என்ன அபாயம் இருக்க முடியும்?
கானகத்தின் நடுவே ஒரு திறந்தவெளி யில் விசால மானதொரு மேஜை. அதன் மீது...
ஆ! உணவு. விதவிதமான உண்டி...!
வேண்டியமட்டும் சாப்பிடு... ம்...
விஜயனுக்கு அந்தச்சூழல் ஏதோ விபரீ தத்தை உணர்த்தியது.
இந்த மிருகங்கள் ஏன் இப்படிப்பயந்து பதுங்குகின்றன? உணவு வகைகளை அப்படி ஏன் பீதி யோடு பார்க்கின்றன?
வஜ்ரா! அந்த உணவுகளில் எதையும் தொடாதே!
ஆனால் அதற்குள் வஜ்ரதந்தன் திராட் சை ரசத்தை அருந்தி விட்டான்.
ஆஹா! சுவைமிக்க பானம்.
அடுத்த விநாடி.......
என் தலை... .. என் கைகள் ... ஐயோ! என்னுள் ஏதோ ஒரு மாற்றம் ஏற்படுகிறது. அது என்ன? ஏன் இந்த மயக்கம்?



விஜயவல்லபன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த விபரீதம் நிகழ்ந்தது. வஜ்ரதந்தனின் உடல் சுருங்கிச் சுருங்கி மங்கலாகி ... அங்கே, அந்த இடத்தில் ....
காட்டுப்பன்றி! வஜ்ரன் ஒரு காட்டுப் பன்றியாகி விட்டானே.
ஹம்.. ஹம். கிர்..ர்
அதே சமயம் .....
வீரனே! என் மந்தையில் நீயும் ஒருவனாகிவிட்டாய். நான் அளித்த உணவைத் தொடாத, பானத்தைப் பருகாத இந்தக் கயவனைத் தாக்கு. ம்..கிழித்துக் கொல்லு ... ம் ... போ!
ம்.. ஏன் தயக்கம்? முழு மூச்சுடன் போய்த்தாக்கு. அவனைக் கொன்று குதறி எறி...
விஜயன் தன் வாளைத் தூர வீசிவிட்டுக் கால்களைத் தரையில் வலுவாக ஊன்றி நின்றான்.
என்னை தாக்க வரும் காட்டுப் பன்றியைக் கொன்றேனெனில் என் நண்பனைக் கொன்றவனாவேன். ஆகவே வெறும் கைகளாலேயே அதை அடக்கு வேன்.
லாகவமாக ஒதுங்கி அதன் கோரைப் பற்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டான்.
வஜ்ரா! நான் சொல்வதைக் கேள். நான் உன் நண்பன் விஜயன். நீ யார் என்பது உனக்கு நினைவிருக்கிறதா? நீ வஜ்ரதந்தன்.
அஹ் ... அஹ்.. அஹ்... ஹ்..
விஜயன் சட்டென்று தன் பிடியை நழுவ விட மிருகமாக மாறி நின்ற வஜ்ரன் உறுமிய படி ஏதும் புரியாமல் மலைத்து நின்றான்.
காட்டு மிருகமே தாக்கு, ம்- கிழித்துப்போடு அவனை. இத்தனை உறுதியான கோரைப் பற்கள் எதற்காக இருக்கின்றன உனக்கு?
தொடரும்



COMICS PDF TIMES


அடுத்தடுத்துப் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. மந்தை மந்தையாக அங்கு நின்றிருந்த காட்டுப் பன்றிகள்...
அதோ பார்...! காட்டுப் பன்றிகளெல்லாம் மனிதர்களாகும் விந்தையைப் பார்.
அவ்வளவு பேரும் நம் படைத் தளபதிகள் - வீரர்கள். அதோ நீலன்! பார்த்திபன், காளிங்கன்...
மனித உருப்பெற்றவர்கள் தாங்கள் உருமாறிய கதையைக் கூறினார்கள்.
எங்கே அந்தச் சூனியக்காரி? அவளை என் வாளுக்கு விருந்தாக்குவேன்
புயலும் சுழிக் காற்றும் எங்கள் கலங்களை இங்கு கொண்டு வந்து ஒதுக்கின. தாங்க முடியாத பசிதாகம்... வருந்தி அழைத்தது விருந்து. உண்டபின் உருமாறினோம்.
கட்டழகுக் கன்னி மாயமாக மறைந்து போனாள்.
வாருங்க இடமில்லை நாம் கப்பல்களைப் பழுது பார்த்துக் கொண்டு இம் மாயத் தீவை விட்டுக் கிளம்புவோம்.
சில நாட்களில் பழுதடைந்த கப்பல்களை நேர் செய்து கொண்டு பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள்.
இந்தக் கப்பல்களெல்லாம் ரத்தினபுரிக்குத் திரும்பட்டும். நம் கப்பலும் அதிலுள்ள வீரர்கள் மட்டும் பூதத் தீவுக்குப் பிரயாணப்படுவோம்.
சரியான முடிவு, அப்படியே ஆகட்டும்.
பல நாள் பிரயாணத்துக்குப் பிறகு...
வஜ்ர தந்தா! அதோ தூரத்தில் தெரிவதென்ன?
திடீரென்று புகைப்படலம். மூடுபனியா? இவ்வளவு வேகமாகப் பரவுகிறதே. குளிர் வேறு தாங்க முடியவில்லை, பல் கிட்டுகிறது... காற்றே உறைந்து விட்டாற் போல. பாய் மரத்திலும் கயிறுகளிலும் பனிக் கட்டிகள்.....
அதோ, அதோ! அந்தப் பனிப் படலத்துக்கு அப்பால்... அது என்ன?
இந்தக் கொடிய குளிரை விடக் கொடுமையாக வேறு என்ன இருக்க முடியும்? நல்லவேளை, கடல் நீர் கல்லாக வில்லை. கப்பல் மெள்ள மெள்ள முன்னேறுகிறது. அருகில் நெருங்கியதும் அதையும் பார்த்து விடலாம்.



பூதத் தீவு 4
கதை: வாண்டுமாமா சித்திரம்: விநு
பயங்கரமான குளிர், அச்சுறுத்தும் அமைதியினூடே விஜயவல்லபனின் கப்பல் ஒரு தீவை நெருங்குகிறது. அதுவே பூதத்தீவு.
சலனமோ சப்தமோ இல்லாத இந்த நிலை பயங்கரமாக இல்லை? காற்றுக் கூட வீச வில்லையே. மரணத்தின் இருப்பிடம் இப்படித் தானிருக்குமோ?
இந்தச் சூழல் அச்சம் தருவதாக உள்ளது. இங்கு நாம் கரை யிறங்க வேண்டாம். திரும்பி விடுவோம்.
பூதத்தீவைக் கப்பல் நெருங்க நெருங்க விஜயனுக்கு அதைப் பற்றிப் பலர் கூறிய செய்திகளெல்லாம் நினைவுக்கு வந்தன.
பூதத்தீவு! பொருத்தமான பெயர்தான். இத்தீவு, இதைச் சூழ்ந்துள்ள கடல் எல்லாமே மர்மங்கள் நிறைந்ததாயுள்ளன.
திடீரென்று எவ்வித முன்னறிவிப்புமின்றி விஜயனின் கப்பலை மரணம் தாக்கியது.
ஆ...
ஐ...யோ...ஓ.
கடற்கரையை யொட்டி இருந்த இருண்ட கானகத்திலிருந்து காட்டு மிராண்டிகள் அம்புகளை மழையாகப் பொழிந்தார்கள்.
விஜயன் தம் வீரர்களுக்கு ஆணையிட்டான்.
இந்தப் பக்கமாக வாருங்கள். கடல் இங்கு ஆழமில்லாதிருக்கிறது. வேகமாகக் கரையேறுங்கள்.


சட்டென்று அம்பு மழை நின்றதும்.
விஜயா, அதோ நம்மைத் தாக்கியவர்கள்.. அவர்கள் மனிதர்களா, பூதங்களா? மிருகங்களைப்போலவே காணப் படுகிறார்களே.
எப்படியிருந்தாலும் அவர்கள் நம்மிடமிருந்து விலகி ஓடுகிறார்கள்.
இது எவ்விதமான கானகம்? மரங்களெல்லாம் உலர்ந்து உயிரற்றுப் பட்டுப்போன நிலையில்...? ஒரே அழுகல் நாற்றம்! குமட்டும் நெடி வேறு. மூச்சு விடவே திணறுகிறதே!
தளபதியாரே! வேதனை தரும் விஷயத்தைச் சொல்ல வேண்டியுள்ளது.
நம் வீரர்களில் முப்பது பேரே மிஞ்சி இருக்கிறார்கள். தவிர நம்மிடம் உண்ண உணவோ, அருந்த நல்ல நீரோ கிடையாது.
புரிந்து கொண்டேன். இந்தக் கானகத்தினுள் முன்னேறுவோம். ஏதாவது ஓடை தென்படலாம். வேட்டையாடி உணவைப் பெறலாம்.
கானகத்தினுள் நெடுந்தூரம் நடந்தும் ஒரு மிருகமும் தென்படவில்லை. பட்ட மரங்களைத் தவிர நீர் நிலையுமில்லை.
நாமும் தாக்கப்படலாம் நம்மைத் தற்காத்துக் கொள்ள இது பயன்படலாம்.
அதோ... அதோ ஒரு கோட்டை. அதன் அமைப்பும் பாணியும் பார்த்தால் நமக்கு முன்பு இங்கு வந்தவர்கள் எழுப்பிய கோட்டை போல் தெரிகிறது.
விந்தையான காட்சி! நமக்கு முன் வந்தவர்களைத் தாக்கிப் போர் நடந்ததற்கான அறிகுறியே காணோமே. எதுவும் பழுதுபடவில்லை. நம்மவர்கள் போர் புரியாமலேயே கொல்லப் பட்டார்களா?
தளபதியே, இதோ இங்கே தண்ணீர்.
தண்ணீர் விஷமிடப் பட்டிருக்கலாமோ என்ற ஐயத்தில் விஜயன் ருசித்துப் பார்க்கிறான்.
நீர் குளிர்ச்சியாகவும் புதிதாகவுமிருக்கிறது, இன்றுதான் சேமித்ததைப் போல.
இங்கு இதை யார் சேமித்து வைத்திருப்பார்கள்? மிருகங்களைப் போலுள்ள அந்த மனிதர்கள் நிச்சயம் நமக்காக இதைச் செய்திருக்க மாட்டார்கள். அவர்களைத் தவிர இம்மர்மத் தீவிலே வேறு யாராவது வசிக்கிறார்களா?
தொடரும்


பூதத்தீவு
கதை: வாண்டு மாமா
சித்திரம்: வினு
5
கானகத்தின் நடுவேயுள்ள தனிமையான கோட்டையில் தங்குகிறார்கள் விஜயனும் அவன் வீரர்களும். இரவுநேரம்....
நம் வீரர்களைக் களைப்பு கண்ணயர வைத்து விட்டது. ஆனால் இத்தூக்கம் அதிக நேரம் நீடிக்க முடியாதென்று எண்ணுகிறேன்.
உண்மைதான். மர்மங்கள் நிறைந்த இந்தப் பூதத்தீவிலே அடுத்த விநாடி என்ன நிகழும் என்பதை யாராலும் சொல்ல முடியாதுதான்.
சொல்லி வைத்தாற் போல இரவு பாராக்கார வீரனின் குரல் அந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு எழுகிறது.
தளபதியாரே விரைந்து வாருங்கள் இங்கே!
கோட்டையைச் சூழ்ந்துள்ள கானகத்து மரங்களெல்லாம் பசுமையான ஜோதி ஒளியிலே தகதகத்தன.
தூங்கும் நம் வீரர்களை எழுப்புங்கள்.
பச்சை நிறத்துடன் ஒளிரும் நெருப்பை நான் இது வரை கண்டதே இல்லை. அதன் புகையில் ஏதோ ஒரு மணம். இது புகையே அல்ல. அப்படியானால்?
மலைச்சாரலில் எழுந்த மற்றோர் ஒளி அங்குள்ள உருவங்களைத் தெளிவாக்கிக் காட்டியது.
ரத்தினபுரி வீரர்களே! உங்களில் உயிரோடிருப்பவர்களைப் பூதத்தீவின் தெய்வத்துக்குப் பலியாக்கப் போகிறோம்.
விஜயா, அது பூதத்தின் குரலா? நம் பக்கத்திலிருந்து பேசுவதுபோலக் கணீரென்று ஒலிக்கிறதே!
பயங்கரமான பேய்ச்சிரிப்பிற்குப்பின் பேச்சுத் தொடருகிறது.
பீதியினால் நடுங்கும் ரணமல்லரின் தூதர்களே! உங்களில் அஞ்சா நெஞ்சமுடையவரே பிழைப்பீர்கள். நீங்கள் சுவாசித்துக் கொண்டிருப்பது விஷக்காற்று. இதில் பிழைத்திருப்பவர்களையே எங்கள் கடவுளுக்குக் காணிக்கையாக்குவோம். கௌரவமான மரணம்!


தளபதியாரே தடுமாற வேண்டாம். தைரியத்துடனிருக்க வேண்டிய தருணமிது.
விஜயா, இவ்வளவு தொலைவிலிருந்தும் நம்முடன் இத்தனை தெளிவாகப் பேசும் இவன் எப்படிப்பட்டவன்? மனிதனா அல்லது பூதத்தின் சாதனையா இது?
பூதத்தீவின் தெய்வத்துக்கு விருந்தாக்கி மகிழ இக்கானகத்தின் மிருகங்கள் உங்களை எங்கள் தேவனின் ஆலயத்துக்கு அழைத்துப் போக வருவார்கள். தயாராக இருங்கள்.
மென் காற்று வீசியது. வீரர்கள் ஒவ்வொருவராக மயங்கி விழுந் தார்கள்.
விஜயா, அந்தக் காட்டுமிராண்டிகள் நம்மீது ஏதோ மந்திரம் போட்டுவிட்டார்கள்.
இல்லை வஜ்ரா, பசுமையாக ஒளி விடும் அந்த நெருப்பு ஒருவகைப் பூச்செடியின் மகிமை. அதிலிருந்து வரும் மணமுள்ள புகையே நம் வீரர்களை மயக்க மடையச் செய்திருக்கிறது.
கடைசியாக விஜயனும் நினைவிழந்தான்.
இதோ அவர்கள்.... கானகத்துக் காட்டு மனிதர்கள்...
நெடுந்தூக்கத்துக்குப் பிறகு விஜயனை, வஜ்ரனின் குரல் விழிப்படையச் செய்கிறது.
விஜயா எழுந்திரு. நாம் பாதாளச் சிறையிலிருக்கிறோம். நம்மை நாடி வருகிறது காலடியோசை... எழுந்திரு.
பயங்கரமான கனவுகள். தங்கமும் ரத்தமும் ஆறாக ஓடுகின்றன. நான் விழித்துக் கொண்டுவிட்டேன்.
பாதாளச் சிறைக் கதவு படீரென்று திறந்தது. பலி பீடத்துக்கு அழைத்துப் போக வந்து விட்டார்கள்.
இந்த விநோதமான மஞ்சள் ஒளிதான் என் கனவில் தங்கமாகத் தோன்றியது.
இந்த ஒளி என் கண்களைக் கூசச் செய்கிறது, விஜயன்....


விஜயனையும் அவன் தோழர்களையும் பூதத்தீவு வாசிகள் தங்கள் கடவுளுக்குப் பலிகொடுக்க அழைத்து வருகிறார்கள்.
பூதத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விஜு
6
அந்த ஆலயம். அதன் முன்னுள்ள ராட்சதச் சிலை - எல்லாமே தங்கத் தினால் ஆனது.
பொற்கோயில், சிலை இவற்றின் மீது சூரிய ஒளி பட்டுத் தகதகப்பதினால் தான் பார்வையைக் கூச வைக்கிறது. இந்த மஞ்சள் ஒளி. வஜ்ரா, இக்கோயில் ஒரு மலை மீதிருக்க வேண்டும்.
இதோ எங்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட இந்த விலங்குகளிலிருந்து தன் கானகத்துக் காவல் படைக்குத் தேவன் சிலரை உங்கள் மூலமாகத் தேர்ந்தெடுப்பார். எப்படி?
உங்களில் ஒருவர் இவ்விலங்குகளிலிருந்து ஒருவரைப் போரிடத் தேர்ந்தெடுங்கள். தன் எதிரியான உங்களைக் கொல்லாவிட்டால் தங்களுக்கு வாழ்வு கிடையாது, இந்தப் பொன்னொளியை மறுபடி காண முடியாது என்று இவர்களுக்குத் தெரியும்.
ரத்னபுரி வீரர்களே! கேளுங்கள். எங்கள் தேவனுக்கு உங்களை எப்படிக் காணிக்கையாக்கப் போகிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
ரத்னபுரி வீரன் ஒருவனது கட்டுக்கள் அவிழ்த்துவிடப்பட்டு ஒரு வாளும் தரப்பட்டதும் பிறகு அவன் இரு குன்றுகளை இணைக்கும் பெரும் பள்ளத்தின் மீதுள்ள மரப்பாலத்தில் தள்ளப்பட்டான்.
அமரசிம்மன் அச்சா நெஞ்சன். வாட்போரிலே வல்லவனை அவனை யாராலும் வெல்ல முடியாது.




COMICS PDF TIMES



COMICS PDF TIMES


விஜயனின் மின்னல் தாக்குதலையும் சமாளித்தபடி சரியாம
லிருந்தான் மங்கு.
உயிர் ஆசை கோழையிடமும் வலிமை ஏற்படுத்தும். இவன் நிலையும் அதுதான்.
திடீரென்று விஜயன் தன் இலக்கைத் திசை திருப்பி மங்குவைத் திணற வைத்தான்.
ஆ... ஹ... ஹ...!
ரணமல்லரின் தளபதியே! கொன்றுவிடு. அந்தக் கோழையின் வாழ்வை முடித்துவிடு...ம்.
காயம்பட்ட மிருகத்தைப்போல இந்த மனிதனின் கண்களில் தான் என்ன பீதி, பரிதாபம்? இவனை நான் கொல்லப்போவதில்லை.
தோல்வியைத் தழுவிய மங்கு முதன்முதலாகப் பேசினான்.
பூசாரியின் கட்டளையை நிறைவேற்றும் ரத்னபுரி வீரனே என்னைக் கொன்றுவிடு. இந்தச் சுத்தமான காற்றிலும் சூரிய வெளிச்சத்திலும் என்னைச் சாகவிடு. எனக்கு உயிர்ப் பிச்சையளித்து இருள் குழிக்குள் உழல விடாதே.
விஜயனின் அந்த மௌனத்தைச் சிதற வைத்தது தலைமைப் பூசாரியின் வெறிக் கத்தல்.
அவர்களைக் கொல்லுங்கள். இருவரையுமே கொன்று குழியில் தள்ளுங்கள். நம் தேவனை அலட்சியப்படுத்தும் அற்பர்களின் ரத்தம் சிந்தட்டும்.
விஜயா...! ஈட்டி ஏந்திய கூட்டம்.
பல ஈட்டி முனைகள் உயர்ந்தன. அவை காட்டுமிராண்டிகளின் கரங்களிலிருந்து விடுபடுமுன்.
வஜ்ரா! எனக்காக உன்னைப் பலியாக்கிக் கொள்ளாதே.
விஜயா, பாலத்தைப் பிணைத்திருக்கும் கயிற்றைத் துண்டாக்கு சீக்கிரம்.
தன் நண்பனுக்கு உதவ முடியாத நிலையில் விஜயன் தன் வாளின் ஒரே வீச்சால் கயிற்றைத் துணித்தான்.
தொடரும்



பூதத்தீவு
8 கதை: வாண்டு மாமா
சித்திரம்: விநு
காய மடைந்த காட்டு மிராண்டி மங்குவை ஒரு கையில் பிடித்துக் கொண்டு மறு கையில் பாலத்தின் கயிற்றைத் துண்டித்தான் விஜயன். கொடியவர்களின் கூட்டம் பாலத்தில் நுழையாமல் பார்த்துக் கொண்டார்கள் விஜயனின் தோழர்கள்.
விஜயா! நாங்கள் உனக்காக மடிவதைப் பெருமையாகக் கருதுகிறோம். நீ ஒருவன் உயிர் பிழைத்தால் போதும்.
நண்பனே! நம் பலப்பரீட்சை இன்னும் முடிவுப் பெறவில்லை.
திடீரென்று பாலம் சிதைந்தது.
பிழைப்பதற்கான நம்பிக்கை மிகக் குறைவு. தப்பிப் பிழைத்தால் இன்று எனக்காக உயிர்த்தியாகம் செய்த ஒவ்வொரு வீரனின் உயிருக்கும் பழிவாங்கியே தீருவேன்.
அறுந்து தொங்கும் மரப்பாலத்தைப் பற்றி இருந்த விஜயனின் பிடி கனம் தாங்காமல் மெல்ல நழுவலாயிற்று.
மங்கு, இனி நாம் அதிக நேரம் தொங்க முடியாது. பிடியை விட்டு விடப் போகிறேன். இக்கானகத்துப் பட்டுப்போன மரங்களின் கிளைகளை முறித்துக் கொண்டு நாம் தரையில் போய் விழுவோம். தயாராகிக் கொள்.
அத்துணிகரச் செயலில் விஜயனின் தலை ஒரு பாறையில் மோத நினைவிழக்கிறான்.
ஆ... ஹ்ம். ஹம்...ம்.
மங்குவுக்கு அடிபலமில்லை, நினைவிழக்கவுமில்லை.
இவனைக் கொன்றெனல் போட்டியிலே வெற்றி பெற்றவனாவேன். இத்தீவிலே சுதந்திரமாக வாழப் பூசாரி எனக்கு விடுதலையளிப்பான்.



விஜயனின் நண்பர்களைப் பூதத்தீவு வாசிகள் ஈட்டி முனையில் தள்ளிக் கொண்டு போனார்கள்.
பள்ளத்தாக்கில் விழுந்த விஜயன் பிழைத்திருப்பானால் எங்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடாமல் தப்பிச் செல்ல வேண்டும். அப்படிச் செய்வானா?
பூசாரி தன் வீரர்களுக்கு ஆணையிட்டான்.
இவர்களைப் பாதாளச் சிறையிலடையுங்கள். அடுத்த திருவிழாவிலே நம் தேவனுக்கு இவர்களைப் பலியிடுவோம். அப்போது இவர்கள் எழுப்பும் மரண ஓலம் இத்தீவிலே எதிரொலிக்கட்டும்.
ஏ, மிருகங்களே! சீக்கிரம் ஓடுங்கள். கானகம் முழுதும் தேடுங்கள். தப்பியவர்களைப் பிணமாகவோ உயிருடனே கொண்டு வாருங்கள். தவறினால் இருள் குழியின் இன்னல்களை நீங்கள் அனுபவிக்க வேண்டும்... ஓடுங்கள்.... ம்...
இதே நேரத்தில் கானகத்தின் பள்ளத்தாக்கிலே மயங்கிக் கிடக்கும் விஜயனை நோக்கி மங்கு ஊர்ந்து கொண்டே....
என்னைத் தோற்கடித்த இந்த ரத்தினபுரி வீரனை நான் இப்போது கொன்றேனானால் போட்டியிலே வெற்றி பெற்றவனாவேன்.
இவன் உயிரற்ற உடலைப் பூசாரியிடம் சமர்ப்பித்தால் அவர் இரக்கம் காட்டி இக்கானகத்தில் நான் சுதந்திரமாக வாழ அனுமதியளிப்பார். இருள் குழியின் இன்னல்களிலிருந்து விடுதலை கிடைக்கும்.
மங்குவின் ஓங்கிய கை தழையுமுன் விஜயன் கண் விழித்துக் கொள்ளுகிறான்.
உன் உயிரைக் காப்பாற்றிய ஒருவனுக்கு நீ காட்டும் நன்றி இதுதானா மங்கு?
தொடரும்



மங்குவின் துரோகச் செயலைக் கண்ட விஜயன் தன் கால்களால் அவனை ஓர் உதை கொடுத்துத் தள்ளினன்.
பூதத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விஜு
9
பூசாரி உங்களை மிருகங்கள் என்று கூறியது பொருத்தம்தான். எந்த மனிதனும் இத்தகைய ஈனமான காரியத்தைச் செய்ய மாட்டான்.
உதையினால் உருண்டு விழுந்த மங்குவின் கை அங்கு தரையில் கிடந்த விஜயனின் வாளின் மீது பதிகிறது.
வீரனே! நம்மில் ஒருவன் தான் வாழ முடியும். இருள் குழியிலிருந்து எனக்கு விடுதலையளிக்கும் தகுதி உன் உயிருக்கு உண்டு
இவர்கள் இப்படி நடுங்கும்படி அந்த இருள்குழிக்குள் என்ன பயங்கரமுள்ளதோ தெரியவில்லையே.
விஜயனின் லாகவமும் வேகமும் மறுபடி அவனைக் காப்பாற்றியது.
கண் இமைக்கும் நேரத்துக்குள் விஜயனின் உறுதியான முஷ்டி..
உன்னிடம் இரக்கம் காட்டிப் பயனில்லை. ஆனாலும் மங்கு, உன்னை வாழவிடப் போகிறேன். உன்னிடமிருந்து பல உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.
மங்குவைத் தாக்கி நினைவிழக்கும்படிச் செய்த அதே வேளையில் பலகுரல்கள் மிக அருகே...
இங்குமில்லை. இன்னும் சற்றுத் தொலைவில் பார்ப்போம். நாம் பாலத்தின் கீழ்ப் பகுதிக்கு வரவில்லையே.



COMICS PDF TIMES


விஜயனையும் மங்குவையும் பூசாரியின் ஆட்கள் கட்டி இழுத்துப் போகிறார்கள்.
10
பூதத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விஜு
ரத்னபுரி வீரனே! மரணத்தையும் விடக் கொடுமையான தண்டனையை அனுபவிக்கப்போகிறோம். நான் ஏன் மரணத்தை விரும்பினேன் என்பதை இருள் குழிக்குள் நீ காணப்போகிறாய்.
தங்கச் சிலையின் முன்னால் இழுத்து வரப் படுகிறார்கள் இருவரும்.
தேவனின் காலடியிலே அவர்களைத் தள்ளுங்கள். பாதாளச் சிறையிலுள்ள மற்ற கைதிகளையும் இழுத்து வாருங்கள். தேவனின் கட்டளைக்குத் தலை வணங் காதவர்களுக்கு நாம் வழங்கும் தண்டனையைத் தெரிந்து கொள்ளட்டும்.
அதோ, விஜயன்...! தப்பிச் செல்லத் தவறி விட்டான்.
நல்ல வேளை. இம்மிருகங்கள் அவரைக் கொல்லவில்லை. நம் தலைவர் உயிரோடிருப்பது நமக்குத் தெம்பூட்டுகிறது.
பூசாரி பிறப்பித்த ஆணை அவர்கள் மகிழ்ச்சியைத் தகர்ப்பதாக இருந்தது.
ரத்னபுரியின் தளபதியே! எங்கள் தேவதேவனின் தாங்க வொண்ணாத கோபத்துக்கு ஆளாகிவிட்ட உன்னை, இருள் குழியின் மிக இருண்ட பகுதியில் தள்ளப்போகிறோம். அங்கு உன்னிடம் வேலை வாங்கப் படும்.
வீரர்களே! உங்கள் தளபதியை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவர் இருள் குழியிலிருந்து வெளிவரும்போது அவரை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. அந்த நிலைக்கு அவர் உள்ளமும் உடலும் உருக்குலைந்து போயிருக்கும்.
இருள்குழி ஒருவனை எப்படி உருமாற்றி அனுப்பும் என்பதை அறிந்தீர்களானால் உங்கள் தளபதியைப் போலத் தப்பிச் செல்ல முயலாமல் வாட்போரிலே சுத்த வீரனாக மடிவதையே வரவேற்பீர்கள்... இழுத்துச் செல்லுங்கள் இவ்விருவரையும்.
பேசாதிரு, நாயே...!
வேண்டாம்... வேண்டாம்... இருள் குழிக்கு என்னை அனுப்பாதீர்கள்... கருணை காட்டுங்கள்...



வெண்கலச் சங்கிலிகளால் விஜயனின் கரங்கள் பிணைக்கப் படுகின்றன.
இங்கு இவர்கள் பூசாரியைப் போலில்லாமல் உன்னைப் போலத்தானே இருக்கிறார்கள். அப்படி இருக்க இவர்களை உனக்கு இத்தகைய கொடுமையை இழைப்பானேன்?
இதெல்லாம் உனக்குப் புரியாது தளபதியாரே! புரிந்தாலும் அதனால் உமக்கோ எங்களுக்கோ பயனேதுமில்லை.
கீழே, கீழே, கீழே நெடுநேரம் நெடுந்தூரம் போய்க் கொண்டிருந்தார்கள்.
சம்மட்டி ஓசை... எதையோ தோண்டும் ஒலி. இந்த இருள் திசையில் எதையோ வெட்டி எடுக்கிறார்கள்.
தங்கம்...! இதை வெட்டி எடுக்கத்தான் இந்த அப்பாவி மக்களை அடிமைகளாக்கிப் பயன் படுத்துகிறார்கள் போலும்.
தளபதியே நீ வேலை செய்ய வேண்டியது இங்குதான்.
ம்... நடக்கட்டும் நாய்களே! துரிதமாக வேலை செய்யுங்கள்.
வெறும் கைகளால் இங்குள்ள பாறைகளிலிருந்து தங்கத்தைப் பிய்த்து எடுக்க வேண்டும் போலும். வெட்டி எடுக்கச் சாதனங்கள் வழங்கினால் அது ஆயுதமாக மாறி விடும் என்ற பயம்.
ரத்னபுரியானே உன் உழைப்பு திருப்திகரமாக இல்லை. ஒரு நாளைக்கு உன்னால் இவ்வளவு தங்கம் தானா எடுக்க முடிந்தது?
கைதிகளின் உள்ளத்தை உடைக்கும் முறை இது தான் போலும்.
ம்.... ஓய்வு எடுக்காதே, வேலை செய்.. இல்லாவிடில்..
உன் சவுக்கினால் என் உடலைத் துன்புறுத்தலாம். ஆனால் என் உள்ளத்து உறுதியைக் குலைக்க முடியாது.
தொடரும்



தன்னைச் சவுக்கினால் அடித்த காவலாளியைத் தன் விலங்கிட்ட கைகளின் முஷ்டியினால் தாக்குகிறான் விஜயன்.
உன்னால் முடியுமானால் என்னைக் கொல், வா. ஒரு வீரனுக்குரிய கௌரவத்துடன் இறக்கிறேன்.
பூதத்தீவு
11
கதை: வாண்டுமாமா
சித்திரம்: வினு
காவலாளியைத் தாக்கி வீழ்த்திய விஜயன் ஓர் ஆயுதத்தைக் கைப்பற்றி மற்ற கைதிகளைத் தன்னுடன் சேருமாறு அழைக்கிறான்.
வாருங்கள் நாம் ஒன்று சேர்ந்து இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு தேடுவோம்.
இவன் ஓர் அந்நியன். இங்குள்ள நிலைமை தெரியாதவன்.
ஓர் அடிமை விஜயனைக் குறிபார்த்து ஒரு பாறையை வீசுகிறான்.
என் கரத்தைப் பலப்படுத்த என்னுடன் சேர்ந்து... ... ஆ... ஆஹ்...!
காவலரே! நான் உங்களுக்கு உதவினேன், என்னிடம் கருணை காட்டுங்கள். இங்கிருந்து எனக்கு விடுதலையளியுங்கள்.
உங்களுக்கு உதவினேன். எனக்குப் பரிசளியுங்கள்.
முட்டாளே! ரத்தினபுரி வீரனை நீ கொன்றிருந்தாயானால் உன் நிலைமை இதை விட மோசமாகி இருக்கும்.
நினைவிழந்து கிடந்த விஜயனைக் காவல்காரனின் வாள்முனை உசுப்பியது.
உன்னைக் கொல்லக்கூடாது. கொல்லுவது கருணை காட்டுவது போலாகி விடும். உன்னை எப்படித் தண்டிக்க வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும்.



என்னிடம் கருணை காட்டுங்கள். ரத்தினபுரியின் தளபதியை வீழ்த்த நான் உதவவில்லையா? வெகுமதிக்கு நான் அருகதையுள்ளவனில்லையா?
இந்தக் கேடு கெட்டவனுக்கு இருட்குழியின் சட்ட திட்டங்கள் தெரியாது போலும். கருணையாம், கருணை, ஹ... ஹ... ஹா!
எங்களுக்கு எதிராக இந்தக் கைதிகளைக் கிளர்ப்பிப்புரட்சி செய்ய நினைத்தாயா? நல்ல வேடிக்கை! இவர்களிடம் வீரம் கிடையாது. தன்மானமில்லா மிருகங்கள் இவர்கள்.
இன்னும் சில வினாடிகளில் உன்னிடமுள்ள அத்தகைய வீரத்தையும் வீராப்பையும் அழித்து விடப்போகிறோம் பார்.
அதன் பிறகும் உன்னிடம் விடுதலை பெறும் வீம்பின் ஒரு பொறி இருக்குமானால் — இந்த அடிமைகளை அப்போதும் உன்னால் உதவிக்கு அழைக்க முடியாது. காரணம், பேசுவதற்கான நாக்கு உன்னிடமிருக்கப் போவதில்லை.
கொலைக்கஞ்சாக் கொடியவர்களின் குத்து வாள் விஜயனின் நாவைத் துண்டிக்க உயர்ந்த அதே நேரத்தில் மங்குவின் குரல் ஒலித்தது.
விஜயா! கலங்காதே, மரணத்தைத் தழுவினாலும் சரி, உனக்கு நான் உதவுகிறேன்.
நம்பிக்கையற்ற செயலிதான். ஆனாலும் உன் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பேன்.
கேவலமாகப் பல்லாண்டு வாழ்வதைவிட மானமுடன் ஒரே நாளில் இறப்பது எவ்வளவோ மேல். மங்கு.
விலங்கிட்ட கரங்களேயானாலும் வீர நெஞ்சங்கொண்ட அவ்விருவரின் தாக்குதலை இருட்குழிக்காவலர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லையே. அப்போது.....
விஜயா, அதோ இன்னும் பலர். நம் வாழ்வு முடிந்த மாதிரிதான்.
தொடரும்



COMICS PDF TIMES



குறிதவறிய ஈட்டியின் வேகம் பாழடைந்த சுரங்கத்தின் கூரையைத் தாங்கி நின்ற தூணைச் சிதைக்க .....
ஓடுங்கள்... பின்னோக்கி ஓடுங்கள்,
விஜயா, சுரங்கம் சரிகிறது. நாம் இதனடியில்.
அடுத்த விநாடி...
இடியோசையுடன் சுரங்கம் நொறுங்கிக் கலகலத்து விழுகிறது.
பாவம் இருட்குழியின் கொடுமையிலிருந்தும் சித்திர வதையினின்றும் இவர்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது.
இவர்கள் இடத்தை நிரப்ப மகிழ்வோடு மற்றவர்கள் வருவார்கள்—வர வேண்டும். பொற்கோயில் கடவுளின் கட்டளை அது.
பாழடைந்த மண்மூடிய இருள் மண்டிய சுரங்கத்தின் வழியே தட்டுத் தடுமாறி முன்னேறிக் கொண்டிருந்தனர் விஜயனும் மங்குவும்.
மேலே மேலே ஊர்ந்து சென்றபோது...
ஏதோ குரல்கள் கேட்கின்றன. ஆனால் எதையும் என்னால் காண முடியவில்லை.
தூரத்தில்... ஏதோ ஒரு வெளிச்சத்தின் பொறி தெரிகிறது மங்கு.
அப்படியானால் இன்னொரு சுரங்கத்தை நெருங்குகிறோம். ஆனால் நம்மைத் தேடி அலைபவர்கள் சுரங்கமெங்கும் நிறைந்திருப்பார்கள். அதிர்ஷ்டம் தொடர்ந்து நம் பங்கில் இருக்குமா?
திடீரென்று அவ்விருவரையும் ஒளிவெள்ளம் குளிப்பாட்டியது.
தேவதேவனின் கோபத்திலிருந்து எவராலும் தப்ப முடியாது. இதோ நாம் தேடும் அடிமைகள்.
நாம் கண்டு பிடிக்கப் பட்டோம். இனி நம்மால் திரும்பக் கூட முடியாது.


விஜயனையும் மங்குவையும் ஒரு காவல் வீரன் பார்த்து விடுகிறான்.
மற்றவர்களை இவன் உதவிக்கு அழைக்குமுன் இவனைப் பேசமுடியாதபடி செய்துவிட வேண்டும்.
கைகளைப் பிணைத்திருந்த விலங்குச் சங்கிலியை மின்னல் வேகத்தில் அவன் கழுத்தில் மாட்டி இழுத்த போது அவ்வீரன் நிலை தடுமாறி..
பூதத்தீவு (13)
கதை: வாண்டுமாமா
சித்திரம்: வினு
அபாயம் அகன்றதும் இருள் மூடிக்கிடந்த சுரங்கப் பாதை வழியே தட்டுத் தடுமாறி முன்னேறி முடிவில்...
விஜயா, பிரதானச் சுரங்கப் பாதைக்கு வந்து விட்டோம். தங்கத்தாது நிரப்பப்பட்ட இந்த வண்டியைச் சுரங்கத்திலிருந்து வெளியே இழுத்துச் செல்லும் அடிமைகளுக்காகக் காத்திருக்கிறான் அந்தக் காவல்காரன்.
அதிர்ஷ்டம் நம் பக்கமிருக்குமானால் இவ் வண்டியின் உதவியாலேயே இங்கிருந்து நாம் தப்பி வெளியேறி விடலாம்.
தங்கக் கனிஜம் ஏற்றப்பட்ட வண்டிக்குள் இருவரும் புகுந்து மறைந்து கொள்ளுகிறார்கள்.
ம்.. வேகமாக இழுங்கள், மிருகங்களா! சீக்கிரம்.
இரக்கமற்ற சாட்டைகள் அடிமைகளின் உடலிலே நெளிந்து விளையாடின. வண்டி மெள்ள மெள்ள முன்னேறிக் கொண்டிருந்தது.
வேகம்... வேகம்..! வலுவற்ற கழுதைகள். உங்கள் வாழ்வு இன்னும் சில நாட்கள்தான். ம்.. முன்னேறுங்கள்.


சுரங்கத்தின் நுழைவாயிலை அடைகிறது பாரவண்டி.
குளிர்ந்த காற்றையும் சூரிய ஒளியையும் காண வேண்டும், சீக்கிரம். கதவைத் திறவுங்கள்.
சுரங்கத்திலிருந்து பொன்னைப்பிரித்தெடுக்கும் உலைக்களத்துக்குச் செல்லும் பாதை குறுகலானது, சரிவானது. அதை இழுத்துச் சென்ற அடிமைகளோ களைத்துத் தெம்பிழந்து...
முட்டாள்களா. வண்டியை இழுத்து நிறுத்துங்கள்..
எங்களால் முடியவில்லை. வண்டியின் சுமை மிக அதிகம் பாதையோ சரிவு. எங்கள் உடலிலோ வலுவில்லை
வண்டிச் சக்கரங்களின் கீழுள்ள நிலம் கனம் தாங்காமல் சரிய, அதே சமயம் வண்டியோடு....
மடையர்கள்.. முட்டாள்கள்.. மிருகங்கள்..
வண்டி உருண்டு விழுந்த நிலையில் அதில் ஒளிந்திருந்த விஜயனும் மங்குவும் எப்படியோ காயமின்றித் தப்பி விடுகின்றனர்.
ஆண்டவன் அருளால் தப்பி விட்டோம். மறுபடி பிடிபட்டால் தப்பவே முடியாது.
அதிர்ஷ்டம் விஜயனின் பக்கமே இருந்தது.
மங்கு, காவல் வீரர்கள் ஏன் அப்படி மண்டியிட்டுத் தலை குனிந்தபடி.. என்ன செய்கிறார்கள்?
மங்கு விஜயனை இழுத்துக் கொண்டு பரபரப்புடன் ஒரு மறைவான இடத்துக்கு ஓடினான். அங்கு அவன் காட்டிய காட்சி..
சூரியத்தீவிலிருந்து வரும் தங்க மனிதர்கள் இவர்கள். பூதத்தீவின் ஆட்சியாளர்கள்-எங்கள் தேவனோடு பேசும் வல்லமை பெற்ற பூசாரிகள்.
தொடரும்


பூதத்தீவு 14
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விஜு
சூரியத்தீவின் தங்கமனிதர்களா? யார் அவர்கள்? விளக்கமாகச் சொல்லேன் மங்கு.
பூதத்தீவிலுள்ள தேவதேவனின் கோயிலுக்குள் நுழையும் தகுதியும் உரிமையும் கொண்டவர்கள் இத்தங்க மனிதர்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை சாபம் பெற்ற இத்தீவிற்கு வருவார்கள். இங்குள்ள ஆண்டவனுக்கு ஆராதனை புரிவார்கள். இங்கு தயாராக உள்ள தங்கத்தைத் தங்கள் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு போவார்கள்.
அவர்களை எங்களில் யாரும் தலை நிமிர்ந்து பார்க்கக் கூடாது. அவர்கள் தேவனின் புதல்வர்கள். தங்கள் தீவில் அவர்கள் கடவுளுக்கு ஒருகோயில் எழுப்புகிறார்கள். அதற்கு வேண்டிய பொன்னை நாங்கள் இங்கிருந்து கொடுக்க வேண்டும் என்பது கட்டளை – இல்லை, தண்டனை.
தண்டனையா?
தண்டனைதான். நாங்களும் அதைத் தலை குனிந்து ஏற்றுக் கொண்டுள்ளோம். அதோ நெடுதுயர்ந்து நிற்கிறாரே சிலையாக, எங்கள் தேவன். அவர் கையிலுள்ள வாளைப் போலவே காலடியில் ஒரு பெரிய வாள் இருந்தது. அவருடைய சக்தி பெற்ற வாள் அது. எப்படியோ திருடு போய் விட்டது, அந்தத் தங்க வாள். அதனால் கோபமடைந்த தேவன் இத்தீவின் புற்களையெல்லாம் கருக்கி விட்டான். பச்சை மரங்களெல்லாம் பட்டுப் போயின. எங்களையும் மிருகங்களாக உழைக்கும் அடிமைகளாகச் சபித்து விட்டான். தேவனின் வாளைப் பறி கொடுத்ததற்கான தண்டனை இது எங்களுக்கு.
மங்கு, நீங்கள் இப்படி விலங்குகளாக நடத்தப்படுவதற்குக் காரணம் அந்தச் சிலையின் காலடியிலிருந்த வாள் காணாமல் போனது தானா? பரிதாபம். இந்தத் தங்க மனிதர்களின் கப்பல்கள் எங்குள்ளன, காட்டுகிறாயா?
காட்டுகிறேன். ஆனால் அக்கப்பல்களில் உன்னால் பிரயாணப்பட முடியாது.
அந்த பூசாரிகளும் அவர்களுடைய அடிமைகளுமே புனிதமான இக்கடலைக் கடந்து செல்ல முடியும். இது எங்கள் தேவனின் கட்டளை. மற்றவர் கடலைக் கடக்க முயன்றால் ஆண்டவனின் கோபம் அவர்களை அழித்துவிடும்.
உங்கள் ஆண்டவனின் கோபம் என்னை ஏதும் செய்யாது. என் விலங்குகளைத் துண்டித்து என் கரங்களுக்கு விடுதலையளி.



COMICS PDF TIMES


விஜயன் கப்பலுக்குள் குதித்ததைக் காவல்காரன் கவனிக்கவில்லை.
தங்க மனிதர்களான இப்பூசாரிகள் இங்கு குடித்துக் கும்மாளமடிக்கிறார்கள். அப்பாவிகளான பூதத் தீவு மக்கள் அங்கு மிருகமாக உழைத்து மடிகிறார்கள்... ம்.. அதிர்ஷ்டம் என் பக்கமிருக்குமானால் இந்த அநீதிக்கு ஒரு முடிவு கண்டே தீருவேன்.
பூதத்தீவு
15
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விஜய
ஒரு புதிய காலை பிறந்தது. மூடுபனியும் புழுக்கமும் கடல் தாவரங்கள் நிறைந்த பகுதியில் கப்பல் நகர்ந்து கொண்டிருந்தது.
ஐயா, தேவனின் ஆக்கினைக்குட்பட்ட இக்கடல் பகுதியில் நான் பலதடவை பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால் இன்றுபோல் என்றுமே கண்டதில்லை. ஏன் இந்த இருள்? எதுவுமே அசையவில்லையே!
எஜமானர்களே! நம் முன்னால் விபரீதமான இருள் திரண்டு எழுகிறது. உலைக்களத்தின் மூச்சுப் போலக் காற்றின் வெப்பம் தகிக்கிறது.
இவர்கள் கூறுவது உண்மைதான். கடல் பறவைகள் கூடக் கலக்கமடைந்து பறக்கின்றன.
திடீரென்று கடல் கொந்தளித்தது. ஹோவென்ற பேய்க் காற்று. புயல்... பயங்கரப் புயல்.
ஆ.. ஆ.. ஹ்ம்.. என்ன நேர்ந்தது? நம்மீது தேவனுக்கு ஏன் இவ்வளவு கோபம்?
மலைபோன்று எழுந்த அலைகள், கப்பல்களில் ஒன்றைக் கபளீகரம் செய்தது.
முட்டாள்களே, மிருகங்களே! பாய்மரத்தை இறக்குங்கள். சீக்கிரம். இல்லாவிடில் அந்தக் கப்பலின் கதிதான் இதற்கும் நேரும்.


ஆனால் காலங்கடந்த எச்சரிக்கையாகி விட்டது அது. புயல் பாய் மரக் கம்பத்தை உடைத்துத் தள்ளியது.
ஆ... ஐ... யோ...!
முறிந்து விழுந்த பாய்மரம், விஜயன் மறைந்திருந்த பகுதியின் கதவைத் தகர்த்து விடுகிறது.
எஜமானர்களே! இதோ இங்கு பாருங்கள்.
தேவனின் கட்டளையை மீறி அந்நியன் எவனோ அவரது எல்லையைக் கடந்திருக்க வேண்டும் அதனால் தான் இந்தக் கோபம் என்று எண்ணினேன். அது சரியாகி விட்டது.
நம் அஜாக்கிரதைக்குத் தேவன் தண்டனை அளித்து விட்டார். அவர் கோபம் தணிய இந்தக் குற்றவாளியை அவருக்குப் பலியிடுவோம். இழுத்து வாருங்கள் அவனை மேலே.
முரட்டுக் கரங்களும் வாள் முனைகளும் விஜயனை மறைவிடத்திலிருந்து இழுத்து வந்து வெளியே தள்ளின.
மண்டியிடு...ம். தேவனின் கோபத்துக்குக் காரணமான கயவனே! தேவதேவனுடைய பணியாளர்களின் பாதங்களிலே உன் தலை பதியும்படி மண்டியிடு.
தேவனின் புனிதமான பூதக் கடலைக் கடக்கத் துணிந்த உன்னை தேவனுக்கே பலியிடுவதன் மூலம்தான் அவர் கோபத்தைத் தணிக்க முடியும். இன்னொரு புயலில் எங்களை அலைக்கழிக்காமல் பழுதடைந்த இக்கப்பல் பத்திரமாகச் சூரியத் தீவை அடைய வேண்டுமானால் உன்னை அவருக்குக் காணிக்கையாக்கியே ஆக வேண்டும். அப்போதுதான் இந்த மூடுபனி விலகும். கட்டுங்கள், இக்கயவனை.
குமுறி வரும் கோபத்தை, வேதனையை, துன்பத்தைப் பற்களை இறுகக் கடித்துக் கொண்டு விழுங்கினான் விஜயன். கொடியவர்கள் அவன் கைகளைப் பிணைத்து முறிந்து கிடந்த பாய் மரத்திலே கட்டித் தொங்கவிட்டார்கள்.
தொடரும்


அந்தரத்தில் ஊசலாடும் விஜயனை நோக்கிப் பிணம் தின்னும் கழுகுகள் பறந்து வந்தன.
புனிதமான பூதக்கடலின் காவலர்கள் அதோ நம் தேவனின் ஆணையை நிறைவேற்ற வந்து விட்டார்கள். குற்றவாளியின் சதையைக் கொத்தி இழுக்கும் போது எழும்பும் ஓலமே தேவனிடம் மன்னிப்புக் கேட்கும் வேண்டுதலாக இருக்கும்.
பூதத்தீவு (6)
கதை: வாண்டுமாமா சித்திரம்: வினு
நான் இறப்பதானால் சுத்தவீரனாகவே இறப்பேன். வலியைச் சகித்துக் கொள்ளும் மனவலிமையைக் கொடு ஆண்டவனே. வேதனையால் ஓலமிடும் உளநலிவைக் கொடுக்காதே.
தாக்க வரும் கழுகுகளைத் தலையாலும் உடல் அசைவினாலும் ஓட்டினான் விஜயன். அவற்றின் கூரான அலகுகள் அவன் உடலைத் தீண்டுமுன் எங்கிருந்தோ ஒரு பெரும் பாறை அக்கப்பலில் வந்து விழுந்தது.
ஆ... ஹ்...!
புயலால் சேதமடைந்த கப்பல் மூடுபனியினூடே தடுமாறி முன்னேறிக் கொண்டிருக்கும்போது கொள்ளைக் கப்பலொன்றின் இலக்குக்கு ஆளாகிறது.
முட்டாளே! அதை மூழ்கடிக்கப் போகிறோமா? அதிலுள்ள செல்வம் நம் கைக்கு வராதே. உன் இலக்கை மாற்று.
கொள்ளைக் கப்பல் தலைவனின் கட்டளை காலங் கடந்ததாகிவிட்டது. சேதமடைந்த கப்பல் ஏராளமான செல்வத்தின் கனம் தாங்காமல் இரண்டாக முறிந்து மூழ்கிறது.
புயலால் அது மிகச் சேதமாகி இருக்க வேண்டும். இவ்வளவு விரைவில் அது மூழ்க அதுவே காரணம்.


அதில் எவ்வளவு பொன் இருந்ததோ? நம் கைக்குக் கிடைக்காமல் போய்விட்டதும் அடிமைச் சந்தையில் விலை கூறி விற்க, ஒருவர் கூட உயிர் பிழைக்கவில்லையே. ஆச்சரியம்!
.. ஆனால் சில வினாடிகளுக்குப் பிறகு..
தளபதியாரே, அதோ, அதோ! ஓர் உருவம், உயிர் இருக்கிறதோ இல்லையோ தெரியவில்லை.
ஆமாம்.. மூச்சிருக்கிறதா பார். அடிமைச் சந்தைக்கு ஒரு சரக்காவது கிடைக்கட்டும்.
இது இவன் மயக்கத்தைத் தெளிவிக்கும். நாம் மூழ்கடித்தது யாருடைய கப்பல் என்பதையாவது இவனிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.
இவன் ஒரு கைதி என்று நினைக்கிறேன். கைகள் கட்டப்பட்டுள்ளன. பார்த்தீர்களா?
சொல், யார் நீ? நீ கைதியாக வந்தது எந்த நாட்டினுடைய கப்பல்.. பேசு.. ம்.
உங்கள் மொழி எனக்குப் புரியவில்லை. நான் ரத்தின புரியின் தளபதி. என்னைச் சிறைப் படுத்தியவர்கள் சூரியத்தீவைச் சேர்ந்தவர்கள். பூதத்தீவிலிருந்து வருகிறேன் நான்.
பூதத்தீவு! கேட்டீர்களா? தளபதியாரே பலமொழிகள் அறிந்தவராயிற்றே நீங்கள். அவன் என்ன சொல்கிறான்?
நாம் மூழ்கடித்தது சூரியத்தீவின் பூசாரிகளைக் கொண்ட கப்பல். இவன் அவர்களின் கைதி.
அப்படியானால் இந்த மூடுபனியில் நாம் வழி தவறி விட்டோம். புனிதமான பூதத்தீவின் கடலில் இருக்கிறோம் நாம்.
இவன் கைதி என்றால் பூதத்தீவின் தேவதேவனின் விரோதியாக இருக்க வேண்டும்.
தேவதேவனின் விரோதியாக இவன் செய்த குற்றம் தெரியவில்லை. எப்படியானாலும் சரி, இவனைக் கொல்லுங்கள். இல்லாவிடில் பூதத்தீவின் காவலரான தேவன் கோபத்துக்கு நாம் ஆளாக நேரிடும்.



COMICS PDF TIMES



சூரியத்தீவுப் பூசாரிகள் கதை கட்டி இருக்கிறார்கள்– பூதத்தீவுக் கடல் புனிதமானது, அதில் அந்நியர் நுழையக் கூடாது என்று. ஏன்? நம் போன்ற வீரர் அங்கு போகக் கூடாது என்பதற்காக. நீங்கள் அதை நம்புகிறீர்கள்.
இத்தனை காலமும் நம்பி மோசம் போனோம். இனி ஏமாற மாட்டோம்.
பூதத்தீவிலும், அதை அடுத்துள்ள சூரியத்தீவிலும் யாருமே கற்பனை பண்ண முடியாத புதையல் குவிந்து கிடக்கிறது. அத்தனை செல்வத்தையும் நமதாக்கிக் கொள்வோம் – நீங்கள் என்னுடன் ஒத்துழைத்தால்.
எங்கள் கண்களைத் திறந்த தலைவரே! உங்கள் கட்டளைப் படி செயல் படுகிறோம்.
இன்றே இப்போதே சூரியத்தீவைத் தாக்குவோம்.
வீரர்களே, அவசரப் படாதீர்கள். சூரியத் தீவு வாசிகளின் படைபலம் நமக்குத் தெரியாது. வெற்றியை நமதாக்கிக் கொள்ளத் திட்டமிட வேண்டும். இந்த வீரன் நமக்கு உதவுவான்.
ரத்தினபுரி வீரனே! உனக்கு விடுதலையும் சுதந்திரமும் அளிக்கிறேன். அதற்குப் பதில் சூரியத் தீவைக் கைப்பற்ற நீ எங்களுக்கு உதவ வேண்டும்.
மகிழ்ச்சியோடு உதவுகிறேன். அந்தக் கொடுமையாளர் நிறைந்த தீவு அழிக்கப் படுவதில் எனக்கும் ஆர்வமுண்டு.
கடற்படை திரட்டக் காந்தார நாட்டுக்குக் கிளம்புகிறது பராந்தகரின் கப்பல்.
காந்தார நாட்டுத் துறைமுகத்தில்...
உடனே சிற்றரசர்களுக்கெல்லாம் செய்தி அனுப்புங்கள். அவர்கள் தங்கள் படையுடன் உடனே வந்து கூடும்படி தூதுவனிடம் கூறுங்கள். சூரியத்தீவின் கொள்ளையிலே எல்லோருக்கும் பங்குண்டு என்றும் தெரிவியுங்கள்!
ரத்தினபுரியின் தளபதியாரே! பூதத்தீவின் அழிவிற்கு வழி வகுப்போம், வாருங்கள். சிற்றரசர்கள் படையுடன் வந்து கூடியதும் நாம் படையெடுத்துப் புறப்படுவோம்.
தொடரும்



கடல்போரில் வல்லவர்களைக் கொண்ட பெரும் படை திரண்டதும்.
வீரர்களே! அஞ்சா நெஞ்சுடன் போரிடுங்கள். என் வாளுக்கும் தோளுக்கும் துணை நிற்கும் நீங்கள் ஒவ்வொருவருமே செல்வந்தராகத் திரும்பலாம்.
பராந்தகர் வாழ்க...
உங்கள் ஆணைப்படியே நடப்போம்.
பராந்தகரே! சூரியத்தீவைப்பற்றி நீங்கள் கொடுத்துள்ள வரைபடங்களெல்லாம் மிகப்பழைமையானவை. அவர்களின் படைபலம் கூட நமக்குச் சரியாகத் தெரியாது.
விஜயவல்லபரே! நீர் பயத்தினால் இப்படி குழம்பவில்லை என்று நினைக்கிறேன். நாம் தோற்க நேர்ந்தால் - அழிவு எங்களைத் தழுவுமானால் - ரத்தினபுரி வீரரே நீரும் எங்களுடன் அழியத்தான் வேண்டும்.
சூரியத்தீவு வாசிகளான கொடியவர்களின் அழிவிலே எனக்கும் அக்கறை உண்டு. காரணங்கள் வேறாகலும்.
பூதத்தீவு 18
கதை: வாண்டுமாமா
சித்திரம்: வினு
பல நாள் பிரயாணத்துக்குப் பிறகு பராந்தகரின் கப்பல் பூதக் கடலை நெருங்கிக் கொண்டிருந்தது.
பரிதாப நிலையிலுள்ள மக்களை எதனால் அடிமைப்படுத்தி ஆட்டிப்படைக்கின்றனர் இந்தச் சூரியத் தீவுப் பூசாரிகள்? அதன் ரகசியம் என்ன? காணாமல் போன அந்தக் கடவுளின் கத்தி இருக்குமிடம் தெரிந்து கொள்வதே எனது குறிக்கோள்.
தளபதியாரே! என்ன ஆழ்ந்த சிந்தனை? நாம் கைப்பற்றப்போகும் பெரும் புதையலைப் பற்றி என்னைப் போலவே நீரும் எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறீரா?
சூரியத் தீவு! அதோ கட்டிடங்களின் உச்சியெல்லாம் தங்கம். சூரிய ஒளியிலே எப்படி தகதகக்கிறது.
பட்டப்பகலில் இப்படிப் பகைவனின் நாட்டை நெருங்குவது ஆபத்து. இரவின் போர்வையிலே உள்ளே புகவேண்டும். நம் வருகையை முன் கூட்டியே அறிந்திருப்பார்கள்.
நெடிதுயர்ந்து நிற்கும் மலைகளால் சூழ்ந்துள்ள தீவுக்குள் நுழையக் குறுகலான ஒரே ஒரு வழி மட்டுமே இருந்தது.
விஜய வல்லபரே! அதோ நாம் புக வேண்டிய நுழைவாயில். இது நம்மைத் தீவின் துறைமுகத்துக்கு இட்டுச் செல்லும்.
பராந்தகரே இதன் வழியே நாம் செல்லுவது ஆபத்தை விலை கொடுத்து வாங்குவது போல. பேராசையால் பெரிய அபாயத்தை எதிர் கொள்ளப் போகிறீர்கள்.



காந்தார நாட்டுக்கப்பல் படை சூரியத் தீவின் குறுகலான இடைப் பகுதியில் நுழைந்ததும்
அவர்கள் நம் கண்ணிப் பகுதிக்குள் வந்து விட்டார்கள்.
கப்பல் மீது அம்பு மழை பொழிந்தது.
ஐயோ! அது என்ன தீப்பிழம்பாக...
பெரிய அடி மரத்தைக் குடைந்து அதனுள் நெருப்பை நிரப்பி இப்படி உருட்டி விடும் முறையை நான் அறிவேன். இவர்களை எச்சரிக்கை செய்தும் ஏற்கவில்லையே.
மரணம் - பீதி - தவிப்பு - இவைகளின் அவல ஓலம். திகு திகு என்று பயங்கரமாக எரிந்து கொண்டு வந்து விழும் பெரிய பெரிய தீ மரங்கள்....
ஆ... ஐயோ!...
காந்தார நாட்டுக்கப்பல் படை இப்படிச் சின்னாபின்னப்படுத்தப்பட்ட போது ஓர் அம்பு விஜயன் மீது பாய்ந்ததும்


உடலில் அம்பு பாய்ந்த அதிர்ச்சியில் பொறி கலங்கிப்போன விஜயன் நெருப்புக் கட்டை பயங்கரமாக எரிந்தபடி உருண்டு வந்து தாக்குவதை உணராத நிலையில்...
அந்த மரணத் தாக்குதலிலிருந்து விஜயனை இமைக்கும் நேரத்தில் காப்பாற்றினான் பராந்தகன்.
பூதத்தீவு
19
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விநு
ரத்தினபுரி வீரனே! உன்னை இப்படி நிலைகுலைய வைத்தது ஓர் அம்புதான்.
பராந்தகரே! நீர் இல்லாவிடில் அந்த அம்பே என் முடிவுக்குக் காரணமாக இருந்திருக்கும். என் உயிரை நீங்கள் காப்பாற்றியது இது இரண்டாவது முறை.
விஜயா, நன்றிக்கடன் செலுத்த விரும்புவாயானால் அதை விரைவில் செயல்படுத்து. இன்னும் சிறிது நேரத்தில் என் வீரர்களில் யாருமே மிஞ்சமாட்டார்கள் போலிருக்கிறது. இதற்கு விரைவில் ஓர் உபாயம் கூறும்.
இந்த இக்கட்டிலிருந்து தப்ப ஒரே வழி - மேலே நம் கப்பல்கள் செல்லக்கூடாது. நாம் கரையிறங்கிப் போரிட வேண்டும்.
அப்படியே ஆகட்டும். இப்போதே என் வீரர்களுக்கு ஆணையிடுகிறேன் — கப்பல்களைக் கரைக்கு ஒதுக்குங்கள், சீக்கிரம்.


காந்தார நாட்டுக் கப்பல் கரை ஒதுங்க ஒரு பாறையில் மோதி நிற்கிறது.
வீரர்களே இந்த விநாடிமுதல் விஜய வல்லபரே உங்கள் தலைவர். அவர் ஆணைப்படி செயல் படுங்கள்.
விஜயனைப் பின் தொடர்ந்து செல்லும் காந்தாரப்படை வீரரின்மீது அம்புகள் மழையாகப் பொழிகின்றன.
அஞ்சாதீர்கள் என் அருமை வீரர்களே, அம்பு மழை கண்டு கலங்க வேண்டாம். விஜயனைப் பின் தொடர்ந்து செல்லுங்கள்.
அத்தனை அம்பு மழையிலும் விஜயன் வீரர்களுடன் மலையுச்சியை அடைந்து விட்டான்.
விரோதிகள் விழுந்தடித்து ஓடுகின்றனர். அதோ... தகதகக்கும் பொன்மாளிகை விரைவிலேயே அது நம் வசமாகப் போகிறது.
சூரியத்தீவின் வீதிகளில் வெற்றிமுழக்கத்துடன் விஜயனும் வீரர்களும் போரிட்டபடியே நுழைகின்றனர்.
ஒவ்வொரு வீட்டையும் சோதனையிடுங்கள்.
நகரின் நடுநாயகமாக விளங்கிய பொன்மாளிகையின் உப்பரிகைக்கு ஓடிவந்தான் ஒரு பூதத்தீவு வீரன்.
எஜமானர்களே, எதிரிகளை எங்களால் விரட்டியடிக்க முடியவில்லை. பேய்களைப்போல் போராடி உள்ளே நுழைந்து விட்டார்கள்.
முட்டாள்களே, நாங்கள் திருடர்களல்ல. விரோதிகளை விரட்டி ஓட்ட முடியாத நீயும் ஒரு தளபதியா? உன் திறமையின்மைக்கு நீ பதில் கூறியாக வேண்டும்.
நாம் இங்கிருந்தபடி தொடர்ந்து போரிட்டோமானால் நமது ஆண்டவனின் புனிதமான இந்தத்தங்கமாளிகை தகர்க்கப்பட்டு விடலாம். நகருக்கு அப்பாலுள்ள சமவெளியில் விரோதிகளை நாம் சுலபமாக அழித்துவிட முடியும். தோற்றுப் பின்வாங்குவது போல நாம் அந்தச் சமவெளிக்குப் போய் விடுவோம்.
தொடரும்


சூரியத் தீவுப் பூசாரிகள் திட்டமிட்டபடி பின்வாங்கிறார்கள். விரோதிகளின் தந்திரத்தை அறியாத காந்தார நாட்டு வீரர்கள் ஒரு வீட்டின் உச்சியிலிருந்து அதைக் கண்டு...
பராந்தகரே! அவர்கள் தலைதெறிக்க ஓடுகிறார்கள்.
20
பூதத்தீவு
கதை : வாண்டுமாமா
சித்திரம் :
வெற்றி, வெற்றி! அதோ அவர்கள் நிலைகுலைந்து ஓடுவதைப் பாருங்கள். ஹா... ஹா.. ஹா!
விஜய வல்லபரே! வெற்றித் தேவதையின் அருள் கிடைத்து விட்டது. ஓடும் விரோதிகளைத் துரத்தி அழிப்போம். இந்தத் தீவும் இதிலுள்ள செல்வமும் இனி நம்முடையவை.
பராந்தகரே, அவர்கள் பயந்து ஓடவில்லை. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நாம் எச்சரிக்கையோடிருக்க வேண்டும்.
எதிலும் சந்தேகம், எச்சரிக்கை. உன் பேச்சிலே நான் பீதியைக் காண்கிறேன். நாம் அவர்களைத் துரத்தி அழிக்கத்தான் போகிறோம். நீ என் வீரர்களுக்குத் தலைமை தாங்கி அதை நடத்தித்தான் ஆகவேண்டும்.
சமவெளியில் விஜயனின் தலைமையில் காந்தார நாட்டு வீரர்கள் முன்னேறி வருவதை சூரியத் தீவை ஆளுபவர்களான பூசாரிகளில் ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்.
நான் நினைத்தபடியே நடக்கிறது. அணி அணியாக வருகிறார்கள், நம்மை அழித்து விடலாம் என்ற ஆசையுடன். இந்தக் கடற்கொள்ளையர்களை நடத்தி வருவது ஒரு பண்பட்ட வீரனாக இருக்க வேண்டும்.


ஆனால் அந்தப்பண்பட்டவனாலும் இனி அவர்களைக் காப்பாற்ற முடியாது. நம் பூமியில் கால் வைத்துள்ள இவர்கள் இத்தனை பேரையும் அழித்தே தீருவோம்.
கட்டுப்பாட்டுக்குப் பெயர் பெற்ற காந்தார நாட்டு வீரர்கள் விஜயனின் தலைமையில் கலங்காமல் முன்னேறுகிறார்கள்.
விஜயா, நீங்கள் கைதியானாலும் எங்களுக்கு வெற்றிதேடித் தந்து மதிப்பு மிக்கவனாகி விட்டாய். இதற்காக உன்னைத் தக்கபடி கௌரவிப்போம்.
ஆனால் பராந்தகரே, நம் வீரர்கள் அழிவை நோக்கி முன்னேறுவதாக என் உள் மனம் எச்சரிக்கிறது.
அதோ பாருங்கள் நம்மை எதிர்த்து நிற்போரின் தொகை மிகக்குறைவு. நாம் பெரும் படையுடன் வருகிறோம், என்பதை அறிந்தும் அவர்கள் உறுதியோடு நிற்கிறார்களே!
பராந்தகரே! அவர்கள்... அவர்கள் எதையோ கொளுத்துகிறார்கள். தீவட்டிகளா? பசுமையாக எரிகின்றதே...!
ஆ! முன்பு பார்த்த அதே பச்சை நிறமான ஒளி, அதன் புகை. முதன் முதலில் இருள் தீவிலே இதன் இனிய மணத்தையும், அதனால் மயக்க மடைந்து செயலிழந்து போனதையும் மறந்து விட முடியுமா?
பராந்தகரே, நாம் உடனே பின் வாங்கியாக வேண்டும். தாமதிக்காமல் ஓடி ஒளிந்தால் தான் உயிர் பிழைக்கலாம். இல்லாவிடில் இந்தச் சமவெளியில் நாம் அத்தனை பேரும் சாகவேண்டியது தான்.
திரும்பி ஓடுவதா? வெற்றியின் சிகரத்தில் ஏறிநிற்கும் இந்த வேளையிலா?
ஆத்திரத்தில் அறிவிழந்த பராந்தகன் தன் வீரர்களுக்குத் தொடர்ந்து முன்னேறும்படி கட்டளையிட்டுவிட்டு....
ரத்தினபுரியானே! உன்னை வீரனென்று எண்ணினேன். கோழை என்பது இப்போது தான் புரிகிறது. எங்களோடு முன்னேறுகிறாயா அல்லது என் வாளுக்குப் பலியாகிறாயா?
தயவு செய்து நான் சொல்வதைக் கேள் நண்பா.
தொடரும்


பராந்தகன் விஜயனின் பேச்சைக் கேட்கத் தயாராக இல்லை வாளை வீசிவிட்டான்.
பூதத்தீவு
21
கதை வாண்டுமாமா
சித்திரம்: விநு
ரத்தினபுரி வீரர்கள் வாட்போரிலே வல்லவர்கள் என்பதை நீ அறிந்ததில்லை போலும்
ஆ.. ஹ.. ஹா.
நான் உன்னைக் கொல்ல மாட்டேன். என் உயிரை இருமுறை காப்பாற்றி இருக்கிறாய். நினைவிழந்து விட்ட உன்னைக் காப்பாற்றி அந்த நன்றிக் கடனைத் தீர்ப்பேன்.
பொன்னாசை பேராசையாகி சிந்திக்கும் உன் சக்தியைத் தின்றுவிட்டது. நீ வீரனாக இருந்தும் போரிலே தோற்றுவிட்டாய். பச்சைப் புகை உன் வீரர் மீது கனமாகப் படிந்து விட்டது. இனி அவர்களை எந்த சக்தியாலும் காப்பாற்ற முடியாது.
மயங்கிக் கிடக்கும் பராந்தகனைத் தோளில் போட்டுக்கொண்டு ஓடினான் விஜயன்.
எப்படியும் அந்தக் குன்றுக்குப் போய் விட வேண்டும். இல்லாவிடில் அந்த நச்சுப் புகைக்கு நாங்களும் பலியாகி விடுவோம்.
மலையுச்சியில் பராந்தகனுக்கு நினைவு திரும்பியதும்
விஜயா, வெட்கம், வெட்கம்! யுத்த களத்திலிருந்து நீ ஓடிவந்ததல்லாமல் என்னையும் தூக்கிவந்து களங்கப்படுத்தி விட்டாயே.
நாம் நேர்மையான யுத்த களத்திலிருந்து ஓடிவரவில்லை பராந்தகா. மரணத்தின் பிடியிலிருந்து தப்பி வந்திருக்கிறோம். அதோ பார், உன் வீரர்களுக்கு நேர்ந்துள்ள கதியை.


குன்றின் உச்சியிலிருந்து பராந்தகன் தன் அருமை வீரர்கள் அத்தனை பேரையும் விரோதிகள் வெட்டிச் சாய்க்கும் பரிதாபத்தைக் கண்டான்.
வெற்றியின் எக்களிப்பிலே சூரியத் தீவுப் பூசாரித் தலைவன் கொக்கரித்தான்.
ஒழிந்தார்கள் பூண்டோடு. அழிந்தார்கள் அனைவரும். நச்சுப்புகை கக்கும் பச்சைத் தீயை அவியுங்கள். வில் வீரர்களே! உங்கள் அம்புகளை நாணேற்றிச் திரிபாருங்கள்.
விஷப் புகையினால் மூச்சுத் திணறி நினைவு குலைந்துபோன காந்தாரத்து வீரர்கள் மீது விஷம் தோய்ந்த அம்புகள் மழையெனப் பெய்தன.
பரிதாபமாக ஓலமிட்டு மடியும் தன் வீரர்களின் குரலைக் கேட்கக் கேட்கப் பராந்தகனின் கர்வம் குலைந்தது, கனவு கலைந்தது, பேராசை பறந்தது.
ஐயோ, மோசம் போனேனே! விஜயா உன் சொல் கேட்டிருந்தால் என் அருமை வீரர்களுக்கு இக்கதி நேர்ந்திருக்காது.
நடந்துவிட்டதை இனி மாற்றியமைக்க முடியாது. இனியாவது என் பேச்சைக் கேள். நாம் இங்கிருந்து உடனே ஓடியாக வேண்டும். இல்லையேல் நாமும் அழிய வேண்டியது தான்.
நச்சுப் புகை மூட்டம் கலைந்ததும் நாசகாரர்களின் பார்வையிலே அவர்கள் பட்டு விட்டார்கள்.
பகைவர்களில் இருவர் தப்பிவிட்டார்கள். நம் நகரை நோக்கி ஓடுகிறார்கள்.
அழிந்துபட்ட இப்படையை நடத்தி வந்தவர்கள் அவ்விருவருமே என்று நினைக்கிறேன். பிடியுங்கள் அவர்களை, கொன்று அழியுங்கள் அந்த அந்நியர்களை.
தொடரும்



COMICS PDF TIMES


ஒரு காலைப் பூமியில் ஊன்றி
புயலெனப் பாய்ந்து வந்த
ரதத்தின் மீது தாவி ஏறினான் பராந்தகன்.
தன் வீரர்களையெல்லாம் கொன்ற
விரோதிகளின் மீது ஏற்பட்ட ஆத்திரம்
அத்தனையும் ஒன்று திரண்டு
பராந்தகனின் தோளிலும் வாளிலும்
இடம் பெற்றன.
ஆ... ஹா...
என் ஒப்பற்ற வீரர்கள் அத்தனை பேரையும்
சூழ்ச்சியால் மாய்த்த கொடியவர்களே,
செத்து மடியுங்கள்.
ஐயோ....ோ
இரு உயிர்களைப் பலி கொண்டா
லும் ஒருவனின் ஈட்டி
பராந்தகனின் உடலிலே
பதிந்து விடுகிறது. மெல்ல
மெல்ல அவன் உயிர் பிரியும்
வேளையில்.
விஜயா, என் நண்பனே!
போ மறைந்து கொள்.
எப்படியும் இக்கொடியவர்
களை நீ அழிப்பாய் என்ற
நம்பிக்கை எனக்கிருக்கிறது.
ஓடு..ஓடு.
ரதம் தொடராததைக் கண்ட
விஜயன் துணிவோடு நகரினுள்
புகுந்தான்.
வீரர்களோடு பூசாரிகள் நகருக்குத் திரும்
புவார்கள். என்னைத் தேடுவார்கள்.
பூசாரிகளின் அரண்மனை புனிதமானது.
வீரர்கள் அதில் புகுந்து தேட மாட்
டார்கள். ஆகவே நான் ஒளிந்து
கொள்ள ஏற்ற இடம் அதுதான்.
கோயிலைச் சார்ந்தே தேவதேவனின் பிரதிநிதிகளான
பூசாரிகளின் அரண்மனைகள் இருந்தன. அதை நோக்கி
விஜயன் நடந்தான்.
புரட்சிக்காரன் வருகிறான், புனிதமான
கோயிலை நோக்கி. ஆனால் அவனை
இக்கதவுக்கப்பால் உயிருடன்
போக விடமாட்டேன்.
தொடரும்


பதுங்கி வரும் விஜயனைப் பதுங்கியிருந்த வீரன் தாக்க வெளிப்படும்போது, நீண்டு விழுந்த அவன் நிழல் விஜயனை விழிப்புறச் செய்து விடுகிறது.
தரையில் உருண்டு தப்பிய நிலையிலும் விஜயனைக் கொல்ல முனைகிறான் காவல் படை வீரன்.
எங்கள் தேவனின் ஆலயத்தின் புனிதத்தைக் குலைக்க வரும் எவரையும் நாங்கள் உயிரோடு விடுவதில்லை.
பூதத்தீவு 23
கதை: வாண்டுமாமா
சித்திரம்: வினு
அதே சமயம் நகருக்குத் திரும்புகின்றனர் பூசாரிகளும் வீரர்களும். விஜயனைக் குறிவைத்த ஓர் அம்பு இலக்குத் தவறி வாளேந்திய வீரனின் உயிரைக் குடிக்கிறது.
ஆ... ஹ்... ஹா...
தேவனின் ஆலயத்தினுள் நுழைகிறான் அவன். தொடர்ந்து சென்று பிடித்து இழுத்து வருவோம் அவனை.
வேண்டாம், வேண்டாம்! தேவனின் ஆலயத்தினுள் அவருடைய குழந்தைகளான எங்களைத் தவிர வேறு யாரும் நுழையக் கூடாதென்பதை மறந்து விட்டீர்களா? நானும் மற்ற ஆலயக் காப்பாளர்களும் அவனைத் தொடர்ந்து சென்று கொல்லுவோம். நீங்கள் இங்கேயே இருங்கள்.
மங்கிய தீவட்டி ஒளியில் ஆலயத்தின் விசாலமான கூடத்தைக் கடந்து ஒரு மூடிய கதவின் முன் வருகிறான் விஜயன்.
தப்ப முடியும் என்ற நம்பிக்கை இல்லைதான். ஆனாலும் இந்தக் கதவுக்கு அப்பால் ஏதேனும் ஒரு மறைவிடம் தப்புவதற்கான அறிகுறி கிடைக்கலாமோ?
அக்கதவுக்கு அப்பால் அவன் கண்டதோ? பெரும் புதையல், பொக்கிஷக் குவியல்.
தங்கம்... தங்கம்! பராந்தகனின் கற்பனைக்கும் மேலான புதையல். ஆ! அதோ... மங்கி வர்ணித்த அதே வாள். தேவதேவனின் காலடியில் இருக்க வேண்டிய- காணாமல் போனதாகக் கதை கட்டிவிடப்பட்ட தங்க வாள்....!


விஜயன் பொக்கிஷக் குவியலிடையே பிரமிப்படைந்து நிற்கும்போது வேட்டை நாய்களின் மூர்க்கமான வெறிக்குரல் ஆலயக் கூடத்திலிருந்து எதிரொலிக்கிறது
தன்னைக் கொல்ல ஆலயக் காப்பாளர்கள் வேட்டை நாய்களை அவிழ்த்து விட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள விஜயனுக்கு அதிக நேரமாகவில்லை. ஒரு மேடை மீது தாவி ஏறினான்.
இந்தப் பூசாரிகளிடம் அடிமையாகிக் கிடக்கும் அப்பாவி மக்களுக்கு வாளைப்பற்றிய உண்மையைச் சொல்ல முடியுமானால்...
விஜயனின் விரல்கள் உயரத்திலிருந்த பலகணியின் விளிம்பைப் பற்றிக் கொண்டு ஏறப் பரபரத்தன.
பயல் தப்பி விடுவான் போலிருக்கிறதே!
முடியாது. வெளியே முற்றம் வெகு கீழே உள்ளது. குதிப்பவன் உயிரோடு எழ முடியாது.
ஆனால் விஜயனுக்கு வெளியே குதிக்கும் எண்ணமில்லை.
அடிமையாகி அவலம் படும் வீரர்களே, கேளுங்கள். உங்கள் தேவதேவனின் புனித வாள் இங்குள்ளது. அது திருடு போகவில்லை. பூதத் தீவிலிருந்து அதை இந்தப் பூசாரிகள்தான் கொண்டு வந்து பதுக்கி வைத்து உங்களைப் பயமுறுத்தி அடிமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கோவிலினுள்ளே புகுந்து வந்து உண்மையைப் பாருங்கள்.
அவன் கூறுவது உண்மையாக இருக்குமா? தேவதேவனின் புனித வாள் திருடு போகவில்லையா?
பொன்னாசை பிடித்த இக்கொடியவர்களின் கொடுங்கோலாட்சிக்கு ஒரு முடிவு கட்டுங்கள். இனி நீங்கள் பயந்து பணிந்து சாக வேண்டாம்
பூதத்தீவு மக்களை அடக்கி ஒடுக்க வைக்கும் சேனாதிபதியின் மூளை விழிப்படைகிறது.
அவன் கூறுவது உண்மைதான். இந்த வீரர்கள் பூசாரிகளுக்கு எதிராகத் திரும்பினால், அடுத்து என் மீதும் பாய்வார்களே. என்னிடமும் இவர்களுக்கு வெறுப்பும் பீதியுமாயிற்றே..
முட்டாள்களே! மரணத்தின் பிடியிலிருந்து தப்புவதற்காக அப்புரட்சிக்காரன் பொய் சொல்லுகிறான். கொல்லுங்கள் அவனை!
தொடரும்


வீரர்கள் உண்மையறிந்து மனம் மாறி விட்டால் தனக்கும் ஆபத்து என்பதை உணர்ந்து தலைவன் ஆடிய நாடகம் நல்ல பலனளித்ததும் விஜயனை நோக்கி அம்புகள் பாய்ந்தன.
இவர்கள் என்னை நம்ப மறுக்கிறார்கள், பயப்படுகிறார்கள். தேவியைப்பற்றிய திகிலை அந்த அளவுக்கு இவர்களிடம் பரப்பி வைத்திருக்கிறார்கள் பூசாரிகள்.
வெளியே அம்பு மழை, கோயிலினுள்ளே வேட்டை நாய்களின் சீறல்.
பூதத்தீவு
கதை! வாண்டுமாமா
சித்திரம்: வினு
24
புரட்சிக்காரனே! நீ எப்படிப்பட்ட மரணத்தை விரும்புகிறாய்? வெளியிலுள்ள விஷ அம்புகளினாலா அல்லது இங்குள்ள வேட்டைநாய்களின் கூரிய பற்களினாலா?
பூசாரிகளின் எக்காளம் சட்டென்று நின்றது, விஜயனின் அந்தச் செயலினால்.
கத்தி... அந்தத் தங்கவாளை அவன் காலால் நகர்த்தித் தள்ளப் பார்க்கிறானே.
விலகிச் செல், இல்லாவிடில் அந்தப் பூதாகாரமான வாள் நம்மீது விழும்.. சீக்கிரம்.
மிகப்பெரிய அத்தங்க வாள் சரிந்த அதே சமயத்தில் விஜயனும் மாடத்திலிருந்து கீழே குதித்தான்.
..இல்லை, தலைமைப் பூசாரியின் மீது தாவி, அவனை அப்படியே அழுத்திக் கொண்டான்.
ஆ.. ஹ்.. ஹா.
பூசாரியின் இடையிலிருந்த உடைவாளை மின்னல் வேகத்தில் பறித்துக் கொண்டான் விஜயன்.
உன் வேட்டை நாய்களை இங்கிருந்து விரட்டு. இல்லாவிடில் என்னோடு நீயும் இறப்பது நிச்சயம்.
வேண்டாம், வேண்டாம்! கத்தியை என் உடலில் பதிக்காதே. நாய்களை வெளியே போகக் கட்டளையிடுகிறேன்.



COMICS PDF TIMES


பூதத்தீவு
25
கதை: வாண்டுமாமா
சித்திரம்: வினு
அமைதியான கடல், வாகான காற்று விஜயன் தன் கப்பலை வேகமாகச் செலுத்த உதவியது.
இதே மாதிரி இருக்குமானால் விரைவில் பூதத்தீவை அடைந்து விடலாம். அங்கு அப்பாவி மக்களிடம் தேவனின் வாளைப் பற்றிய உண்மையை நீ கூற வேண்டும்.
நான் அப்படிக் கூறுவேன் என்று நினைத்தால், நீ ஒரு முட்டாள்.
என்னைச் சித்திரவதை செய்து சொல்ல வைத்தாலும் தேவதேவனிடம் பயமும் பக்தியுமுடைய அந்த முட்டாள் ஜனங்கள் அதை நம்புவார்களா?
இவன் சொல்வதும் உண்மைதான். தேவதேவனுக்கு எவ்விதச் சக்தியும் கிடையாது என்பதைப் பூதத்தீவு மக்கள் ஏற்கமாட்டார்கள்... ம் எப்படியாவது இக்கொடியவனிடமிருந்து உண்மையை வெளிப்படுத்தியே ஆகவேண்டும்.
அதே சமயத்தில் வஞ்சகன் சேனபதி, மற்ற பூசாரிகளுடன் ஒரு கப்பலில் விஜயனைத் தொடருகிறான்.
அதோ... தேவனின் தங்கவாளின் ரகசியமறிந்த அந்நியன் உங்கள் சகோதரருடன் போகும் கப்பல். உங்கள் வில் வீச்சின் தூரத்துக்கு இதைக் காட்டிக் கொடுத்த என் விசுவாசத்தின் பரிசாக நீங்கள் குவித்து வைத்திருக்கும் செல்வத்தில் எனக்கும் கொஞ்சம் பங்கு தருவீர்களா?
உன் விசுவாசத்துக்குத் தக்க பரிசு உண்டு...
இதுதான் அந்தப் பரிசு. தேவனின் தங்கவாள் எங்களிடமில்லாததை நீயும்தானே பார்த்து விட்டாய்? ஆகவே உன் வாயும் அடைக்கப்பட வேண்டும்.
ஆ... ஹ்... ஹா...
அதே சமயம்...
இதென்ன...? கோபங்கொண்ட அரக்கனின் கிரகைப் போல...
'ஹோ' வென்ற பேரிரைச்சல்.
அதோ, ஐயோ...
வெப்பம்... அனல்... தகிப்பு... ஐயோ தாங்க முடியவில்லையே...



COMICS PDF TIMES



நினைக்கமுடியாத செல்வத்தை ஒருசேரப் பார்த்த வியப்பில் சிலையாகிப்போன விஜயன் தன் பின்னால் ஈட்டியுடன் ஓர் உருவம் நிற்பதைக் கவனிக்கவில்லை. ஆனால் பூசாரி பார்த்து விட்டான்.
ஈட்டியை வீசிக் கொல் இவனை. உன் எஜமானனாகிய நான் ஆணையிடுகிறேன். தேவதேவனின் விரோதியான இந்த அந்நியனைக் கொன்று போடு.
பூதத்தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: விஜு
26
திடுக்கிட்டுத் திரும்பினான் விஜயன்.
ரத்தினபுரிவீரனே, விஜயா! என்னை மறந்து விட்டாயா? என் உயிரைக் காப்பாற்றினாய். சூரியத்தீவிலிருந்து திரும்பி வரும்வரை காத்திருக்கும்படிக் கூறிப்போனாயே.
உன்னை மறக்கவில்லை மங்கு. உங்களையெல்லாம் அடிமையாக்கியுள்ள ரகசியத்தையும் அறிந்து வந்திருக்கிறேன்.
தேவதேவனின் மறைந்த வாளைப்பற்றிக் கூறுகிறான் விஜயன்.
நண்பா, உண்மை இதுதான். தந்திரசாலிகளும் கொடியவர்களுமான சூரியத்தீவுப் பூசாரிகள், இத்தீவிலுள்ள தங்கத்தைத் தங்கள் ஆலய அரண்மனையில் கொண்டு போய் நிரப்புவதற்காக இப்படியொரு கதை கட்டிவிட்டு உங்களை அடிமைப் படுத்திக் கொண்டார்கள்.
தேவதேவன் சாபமிடவில்லை, கோபமடையவில்லை என்று கூறுகிறாயே, பின், இந்தத்தீவு ஏன்இப்படி சூனியமாக இருக்கிறது? இங்கு பசுமையே கிடையாது. புல்கூட முளைக்கவில்லையே, ஏன்?
இது இயற்கையின் விபரீதம். இத்தீவின் கீழே எரிமலை குமுறிக் கொண்டிருக்கிறது. தங்கச்சிலையாக நிற்கும் உங்கள் சாமியின் கோபமல்ல. இதை அந்தப் பூசாரிகள் அறிவார்கள். இயற்கையின் செயலை இவர்கள் தங்களுக்குச்சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.
இதற்குமேல் நான்விளக்கிக் கொண்டிருக்க அவகாசமில்லை. என் கூற்றை மெய்ப்பிக்க இந்தக் கொடியவனைப் பேசவைத்தாக வேண்டும். இவன் தோழர்கள் இங்கிருந்து கிளம்புமுன் அது நிகழ வேண்டும். இன்னும் சில மணிநேரத்தில் இத் தீவு அழியப்போகிறது.
தேவதேவனிடமும், இந்தப் பூசாரிகளிடமும் என் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல விஜயன். இவனை உன் பிடியிலிருந்து காக்கவே அவர்கள் முயற்சிப்பார்கள்.


இருள் குழிக்குள் செல்லும் வாசல் காவலின்றித் திறந்து கிடக்கிறது. நம் ஒரே நம்பிக்கை அது தான்.
மங்கு அந்தக் கயிற்றை எடுத்துக் கொள். இக்கொடியவனைக் கட்டிக் குழியின் அடி வரை இறக்க அது போதுமானதாக இருக்கும்.
தலைமைப் பூசாரியைக் கட்டி, இருள் குழியின் பாதாளத்துக்கு இறக்கிய போது கீழிருந்து பூமியின் குமுறல் ஒலி எழுகிறது.
பூமியின் வயிற்றிலிருந்து கிளம்பும் தீக்கனலின் வெப்பத்தை உணருகிறாயா? பூமியின் நடுக்கம் தெரிகிறதா? இதோ, இந்தக் கயிற்றை வெட்டி உன்னைக் குழிக்குள் தள்ளப் போகிறேன்.
ஐயோ, வேண்டாம்.. வேண்டாம்...
பூசாரி, உயிர் ஆசையில் உண்மையைக் கூறி அலறுகிறான். அது குழியின் ஆழத்திலிருந்து சுவர்களில் மோதிப் பெரிதாகி மேலே கூடியுள்ள பூதத்தீவு வாசிகளின் செவிகளில் விழுகிறது.
...என்னைக் குழிக்குள் தள்ளிக் கொல்லாதே. நான் அவர்களிடம் உண்மையைக் கூறிவிடுகிறேன். தேவதேவனும், அவரது கோபமும், சாபமும் எல்லாம் பொய். நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன். பூசாரிகளாகிய நாங்கள்தான் அந்தத் தங்க வாளைத் தேவனின் காலடியிலிருந்து அப்புறப்படுத்தி ஒளித்து வைத்தோம். நீ சொல்வதையெல்லாம் கேட்கிறேன். கருணை காட்டி என்னை மேலே தூக்கு.
விஜயன் தலைமைப் பூசாரியை மேலே தூக்கியதும் அவனைக் கண்ட பூதத்தீவு மக்கள் கொதித்தெழுகிறார்கள்.
தங்கத்துக்காக இவர்கள் நம்மை மிருகங்களைப் போல நடத்தினார்கள்.
பூசாரிகளும் நம்மைப் போல மனிதர்கள்தான். தங்கச் சிலை, தேவதேவன், ஒரு கற்பனை... பொய்.
கொல்லுங்கள்.. அடிமையாக்கிக் கொடுமைப்படுத்திய வர்களை வெட்டித் தள்ளுங்கள்.
ஆ... ஹ... ஹா... யோ...




COMICS PDF TIMES